# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# MCOP. No.156/2025

2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.1 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிரேமா | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன். முதல்தகவல்அறிக்கை நகல் ம.சா.ஆ.1, சட்டப்பிரிவுமாறுதல்அறிக்கை ம.சா.ஆ.2, பெரம்பலூர் அரசு மருத்துவமனை வழங்கிய விபத்துபதிவேட்டு நகல் ம.சா.ஆ.3, திருச்சி காவேரி மருத்துவமனை வழங்கிய விபத்துபதிவேட்டு நகல் ம.சா.ஆ.4, பிரேதகூராய்வுஅறிக்கை நகல் ம.சா.ஆ.5, இறப்புசான்று நகல் ம.சா.ஆ.6, வாரிசுசான்று நகல் ம.சா.ஆ.7, இறந்தவரின் ஆதார்அட்டைநகல் ம.சா.ஆ.8, மனுதாரர்களின் ஆதார்அட்டைநகல்கள் ம.சா.ஆ.9, வரிசை (எண்ணம்-3) 1ம் எதிர்மனுதாரரின் பதிவுபுத்தகம் நகல் ம.சா.ஆ.10, 1ம் எதிர்மனுதாரரின் வாகன காப்பீடு சான்று நகல் ம.சா.ஆ.11, 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் ஓட்டுநர்உரிமம் நகல் ம.சா.ஆ.12, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் Premit நகல் ம.சா.ஆ.13, 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் Fitness Certificate நகல் ம.சா.ஆ.14, மாதிரிவரைபட நகல் ம.சா.ஆ.15,

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை:**

விபத்தில்இறந்துபோன மகேந்திரபூபதி என்மகனாவர். விபத்து சமயத்தில் என்மகனுக்கு 18 வயது நடந்துகொண்டிருந்தது, முடியவில்லை. என்மகனுக்கு அப்போது ஓட்டுநர்உரிமம் இல்லை என்றால் சரிதான். என்மகன் ஓட்டிசென்ற வாகனம் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது. என்மகன் தான் ஓட்டுநர்உரிமம் இல்லாமல் வாகனத்தை வேகமாக ஓட்டிசென்று விபத்தை ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. விபத்து எப்படி நடந்தது என்று கேட்டு தெரிந்துகொண்டேன். விபத்து சமயத்தில் என்மகன் மோட்டார்சைக்கிளில் அரியலூரிலிருந்து பெரம்பலூர் நோக்கி வந்துகொண்டிருந்தார். அந்த சாலை இரண்டு லாரிகள் ஒரே நேரத்தில் செல்லுமளவிற்கு அகலமான ரோடு என்றால் சரிதான். என்மகன் மீது மோதியதாக சொல்லப்படும் வாகனம் லாரி ஆகும். விபத்து சமயத்தில் என்மகன் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. என்மகன் தலைக்கவசம் அணியாமல் விபத்து சமயத்தில் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் மோட்டார்சைக்கிளிளை ஓட்டிவந்து திடீரென்று வலதுபக்கம் திரும்பியதால் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரில் வந்த லாரி ஓட்டுநர் கவனமாகவும், சரியான வேகத்திலும் தான் முறையான ஆவணங்களுடன் லாரியை ஓட்டிவந்தார் என்றால்சரியல்ல. விபத்திற்கு காரணம் என்மகன் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டிருக்கவில்லை என்றால் சரியல்ல. என்மகன் பெயிண்டர் வேலை செய்து மாதம் ரூ.30000/- வருமானம் ஈட்டிவந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரிய்லல. என்மகனின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் அதிகமான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றும், அது கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.